மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 60/2017 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | K.R.மணி | நாள் | 15.12.2022 |
| தகப்பனார் பெயர் | இராமசாமி கவுண்டர் | | |

1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–

8) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் என் தந்தை வழி தாத்தாவின் பெயர் என்னவென்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், நாச்சியப்ப கவுண்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது. எங்கள் உறவு முறையில் நாச்சியப்ப கவுண்டர் என்ற பெயரில் இரண்டு நபர்கள் உள்ளதால் அடையாளம் காண்பிப்பதற்காக என் தாத்தாவை சின்ன நாச்சியப்ப கவுண்டர் என அழைப்பார்கள்.

9) வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் என் தாத்தாவின் பெயர் நாச்சியப்ப கவுண்டர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக அவ்வாறு இரண்டு நாச்சியப்ப கவுண்டர் இருப்பதால் என் தாத்தாவை சின்ன நாச்சியப்ப கவுண்டர் என அழைப்பார்கள் என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால், சரியல்ல.

10) வா.சா.ஆ.1 கிரயபத்திரத்தின் சொத்து விவரத்தில் 12 ஏக்கர் 38–3/4 செண்ட் கிரயம் பெற்றதாக கண்டுள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.1ல் கண்டுள்ள சொத்தை என் தாத்தா இறந்ததற்கு பின்னிட்டு அவரது மனைவியான பௌதாயி அம்மாளும், மேற்படி வா.சா.ஆ.1ல் மற்றொரு கிரயதாரரான செல்லப்ப கவுண்டர் மகன் நாச்சப்ப கவுண்டர் ஆகியோர்களும் பாகம் பிரித்து கொண்டனர் என்றால், சரிதான்.

11) வா.சா.ஆ.1 கிரயப்பத்திரத்தில் உள்ள 12 ஏக்கர் 38–3/4 செண்ட் நிலத்தை பொறுத்து வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தில் என் பாட்டிக்கும், நாச்சப்ப கவுண்டருக்கும் தலா 6 ஏக்கர் 20 செண்டுகள் என்ற அளவில் சமமாக பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி நாச்சப்ப கவுண்டரும், என் பாட்டி பௌதாயி அம்மாளும் அண்ணன் தங்ககை என்பதால், வா.சா.ஆ.2 பாகபிரிவினை

பத்திரத்தில் அவ்வாறு சமமாக இருந்த போதிலும் நடைமுறையில் அவர்களது அனுபவத்தில் என் பாட்டி பௌதாயி அம்மாளுக்கு 6 ஏக்கர் 60 செண்ட் நிலமும், அவரது சகோதரர் நாச்சப்ப கவுண்டருக்கு 5 ஏக்கர் 80 செண்ட் நிலமும் ஒதுக்கப்பட்டு, அதன் அனுபவத்தில் அவரவர் இருந்ததன் பேரில் அனுபவத்தில் இருந்த அளவை பொறுத்து UDR ல் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

12) நான் வா.சா.ஆ.2 பாகபிரிவினை பத்திரத்தில் கண்டுள்ள பதிவுகளுக்கு முரணாக இவ்வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில்தான் மேற்படி நாச்சியப்ப கவுண்டர் அனுபவித்து வந்த 6 ஏக்கர் 20 செண்ட் நிலம் அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது மகனான செல்லப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால், சரியல்ல. மேற்படி செல்லப்ப கவுண்டருக்கு திருமணம் ஆகவில்லை என்றால், சரிதான்.

13) மேற்படி செல்லப்ப கவுண்டருடன் பிறந்த சகோதரிகள் எத்தனை பேர் என்றால், 3 பேர். அவ்வாறு செல்லப்ப கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 6 ஏக்கர் 20 செண்ட் நிலத்தில், 4 ஏக்கர் 23 செண்ட் நிலத்தை அவரது சகோரிகளுள் ஒருவரான செல்லம்மாள் என்பவருக்கு ஆவண எண்.1206/82 –ன் படி செல்லப்ப கவுண்டர் கிரயம் கொடுத்துவிட்டார் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

14) அவ்வாறு செல்லம்மாளுக்கு 6 ஏக்கர் 20 செண்ட் நிலத்தில், 4 ஏக்கர் 23 செண்ட் நிலத்தை விற்றதற்கு பின்னிட்டு செல்லப்ப கவுண்டரிடம் மீதி 1 ஏக்கர் 97 செண்ட் நிலம்தான் இருந்தது என்றால், சரியல்ல. செல்லப்ப கவுண்டருக்கு ச.எண்.140 ல் 1 ஏக்கர் 97 செண்ட் மட்டுமே உள்ள நிலையில், ஆவண எண் 1207/82 ன் படி 2 ஏக்கர் 82 செண்ட் நிலம் தனக்கு உள்ளதாக கூறி சின்னப்ப கவுண்டருக்கு விற்றுள்ளார் என்றால், செல்லப்ப கவுண்டர் தன் அனுபவத்தில் இருந்த நிலத்தை தான் விற்றுள்ளார்.

15) வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தின் மூலம் ச.எண்.140 ல் செல்லப்ப கவுண்டருக்கு 1 ஏக்கர் 97 செண்ட் மட்டுமே உள்ள நிலையில், தனக்கு 2 ஏக்கர் 82 செண்ட் உள்ளதாக

கூறி 85 செண்ட் நிலம் கூடுதலாக சின்னப்ப கவுண்டருக்கு விற்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

(1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1ன் குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஓம்/—திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.